3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு வனச் (திருத்தம்) சட்டமுன்வடிவு, 2019

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு வனச் (திருத்தம்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், பார்க்கலாம்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு வனச் (திருத்தம்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடு) என்ன? இருங்கள். (குறுக்கீடு) அப்படியா? அதை முன்பே நீங்கள் சொல்லியிருக்க வேண்டும் அல்லவா? சரி, சொல்லுங்கள்.*

திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எதிர்க்கின்றோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*